**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 80/2013 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 5 |
| Name | : | ஜான் வின்சன்ட், வயது 57 |
| Father Name/Husband Name | : | சாமுவேல் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of November 2025.

**(A1–A3 present. A4 absent. 317 CrPC petition filed and allowed).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜர் இல்லாத எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மூன்று அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையதுதான். இந்த கையெழுத்துகளை எங்கு, எதற்காக செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. **(அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் முதல் கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.35, அ.சா.ஆ.36, அ.சா.ஆ.37, அ.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2 கடந்த 18.05.2010 ஆம் தேதி 21.00 மணியளவில் வேலாயுதபுரம் பஸ்ஸடாப்பில் வைத்து கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரி முனியசாமி என்பவரை பிடித்து விசாரித்தபோது எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உங்கள் முன்பாகவும், மகேஷ்வரன் என்பவர் முன்பாகவும் பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்

19.05.2010 ஆம் தேதி 11.30 மணியளவில் எதிரி செந்தில்குமார் என்பவரை அடையாளம் காட்ட அவரிடமிருந்து குவாலிஸ் கார் ஒன்றை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் நீங்கள் இரண்டாவதாக கையொப்பம் செய்ததாகவும், பின்னர் அதே தேதியில் 17.00 மணிக்கு கேசவன் என்பவர் அடையாளம் காட்ட அவரிடமிருந்து Scorpio கார் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் நீங்கள் இரண்டாவதாக கையொப்பம் செய்ததாகவும், அன்றைய தினம் 05.00 மணிக்கு கதிரேசன் என்பவரை அடையாளம் காட்ட அவரிடமிருந்து Maruthi 800 காரை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் நீங்கள் இரண்டாவதாக கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.